இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1990 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டவீட்டு (திருத்தச்) சட்டம்

*[1990 ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

*1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.55

**1990 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டவீட்டு (திருத்தச்) சட்டம்**

[1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 08/88

**வேலையாட்கள் நட்டவீட்டுக் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வேலையாட்கள் நட்டவீட்டுக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 189 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) "வயதுமுதிர்ந்தவர்" அத்துடன் "பாராயமடையாதவர்" என்பனவற்றிற்கான வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(ஆ) 'தங்கிவாழுநர்' என்னும் வரைவிலக்கணத்தில், 'இறந்த மகன் ஒருவரின் பராயமடையாத ஒரு பிள்ளை', என்னும் சொற்களுக்குப் பதிலாக 'இறந்த மகன் ஒருவரின் அல்லது இறந்த மகள் ஒருவரின் பராயமடையாத பிள்ளையொருவர்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) 'உள்ளூரதிகாரசபை' என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"உள்ளூர் அதிகாரசபை" என்பது மாநகரசபை ஒன்றினை, நகரசபை ஒன்றினை, அபிவிருத்திச்சபை ஒன்றினை, அத்துடன் பிரதேச சபை ஒன்றினையும் உள்ளடக்கும் ;

(ஈ) 'முழுமையான இயலாமை' என்பதன் வரைவிலக்கணத்திற்கான காப்புவாசகத்தில், "இரண்டு கண்களிலும் நிரந்தரமான முழுப் பார்வை இழப்பிலிருந்து அல்லது " என்ற சொற்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(உ) "வேலையாள்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"வேலையாள்" என்பது, ஒப்பந்தமானது வெளிப்படையானதாயினுஞ்சரி அல்லது உட்கிடையானதாயினுஞ்சரி, வாய்மொழி மூலமாயினுஞ்சரி, அல்லது எழுத்திலானதாயினுஞ்சரி, சேவை ஒப்பந்தமாயினுஞ்சரி அல்லது தொழில் பயிலுநர்

ஒப்பந்தமாயினுஞ்சரி, அல்லது ஏதேனும் வேலையை அல்லது தொழிலை நேரடியாக நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தமாயினுஞ்சரி அத்துடன் அதன் கீழ் செலுத்தப்படற்பாலதான ஊதியம் நேரத்தைக் கொண்டோ செய்த வேலையைக் கொண்டோ வேறு வகையாகவோ கணிக்கப்படினுஞ்சரி அத்துடன் அத்தகைய ஒப்பந்தம் இவ்வரைவிலக்கணம் வலுவுக்கு வருவதற்கு முன்னரோ பின்னரோ ஆக்கப்பட்டதாயினுஞ்சரி, ஒரு தொழில்தருநருடன் அவரது வியாபார அல்லது தொழில் நோக்கங்களுக்காக ஏதேனும் தன்மையில் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ள அல்லது வேலை செய்கின்ற எவரேனும் ஆள் எனப் பொருளாகும்; ஆனால் பின்வருவோரை உள்ளடக்காது.

(அ) இலங்கையில் ஆயுதப் படைகளுள் ஏதேனும் ஒன்றில் சிவில் தன்மையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் ஒருவர் அல்லாதவரும், அப்படைகளின் உறுப்பினர் ஒருவர் என்ற தன்மையில் பணியாற்றுகின்றவருமான ஆள் ஒருவர்;

(ஆ) இலங்கைப் பொலிசுப் படையின் உறுப்பினர் ஒருவர்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், 'அரசாங்கத் திணைக்களம் எதுவும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'அரசாங்கத் திணைக்களம் எதுவும்' மாகாண சபை எதுவும்' என்னும் சொற்களையும், "அத்திணைக்களத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்திணைக்களத்தின், சபையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, அதற்கான காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியில், "ஏழு நாட்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்துக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மூன்று நாட்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்துக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, "ஊறுக்கு நேரடியாகச் சார்த்தியுரைக்கப்படற்பாலதாக விருந்தாலேலொழிய," என்ற சொற்களுக்குப் பதிலாக "ஊறுக்கு நேரடியாகச் சார்த்தியுரைக்கப்படற்பாலதாக இருந்தாலேயொழிய, அல்லது அந்நோயானது அவரது தொழிலின் தன்மைக்கு நியாயமாகச் சார்த்தியுரைக்கப்படற்பாலதாக விருந்தாலேயொழிய" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(i) அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும் :—

"(அ) ஊறின் காரணமாக மரணம் ஏற்பட்டு, இறந்தவரான வேலையாள் IV ஆம் அட்டவணையின் முதலாம் நிரையில் காட்டப்பட்ட எல்லைகளுக்குள்ளாக வருவதான மாதாந்தச் சம்பளத்தைப் பெறுபவராகவும் இருக்குமிடத்து—அதன் இரண்டாம் நிரையில் அத்தகைய எல்லைகளுக்கு எதிராகக் காட்டப்பட்ட தொகை.".

(ii) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்.—

"(ஆ) ஊறின் காரணமாக நிரந்தரமான முழுமையான இயலாமை ஏற்பட்டு, இறந்தவரான வேலையாள் IV ஆம் அட்டவணையின் முதலாம் நிரையில் காட்டப்பட்ட எல்லைகளுக்குள்ளாக வருவதான மாதாந்த சம்பளத்தைப் பெறுபவராகவும் இருக்குமிடத்து—அதன் மூன்றும் நிரையில் அத்தகைய எல்லைகளுக்கு எதிராகக் காட்டப்பட்ட தொகை.".

(iii) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், அந்தப் பந்தியின் ஆரம்பத்திலிருந்து "அக்காலப்பகுதியின் போதும் செலுத்தப்படற்பாலதாகும் என்பது வரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(ஈ) ஊறின்காரணமாக தற்காலிக இயலாமை, அது முழுமையானதாயினுஞ்சரி அல்லது பகுதியளவினதாயினுஞ்சரி ஏற்படுமிடத்து, அந்த வேலையாள் IV ஆம் அட்டவணையின் முதலாம் நிரையில் காட்டப்பட்ட எல்லைகளுக்குள்ளாக வருவதான மாதாந்த சம்பளத்தைப் பெறுபவராக இருக்கும் விடயத்தில்—அதன் நான்காம் நிரையில் அத்தகைய எல்லைகளுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள பணத்தொகையில் ஆன அரைமாதக் கொடுப்பனவொன்று இயலாமைத் தேதியிலிருந்து மூன்று நாள் கொண்டதான ஒரு காத்திருத்தற் காலப்பகுதி முடிவடைந்த பதினாறும் நாளிலன்றும் அதன்பின்னர் அரைமாதத்திற்கு ஒரு முறையாக இயலாமை காலப்பகுதி அல்லது ஐந்து ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதி, இதில் எந்தக் காலப்பகுதி குறைந்ததோ, அந்தக் காலப்பகுதிக்கும் செலுத்தப்படற்பாலதாகும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது.—

(i) அதன் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் "கூட்டுமொத்தமாக, நூறு ரூபாவுக்கு மேற்படாத" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கூட்டுமொத்தமாக ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அதன் (2) ஆம் உட்பிரிவில் , "பத்து ரூபாவுக்குக் குறையாததும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "நூறு ரூபாவுக்கு குறையாததும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஆணையாளர்" என்பதிலிருந்து "அத்தகைய செலவுகள் எந்த ஆளால் உறப்பட்டதோ அந்த ஆளுக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன்" என்ற சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"ஆணையாளர், வேலையாளின் மரணச்சடங்குச் செலவுகளுக்கான உள்ளபடியான செலவுத் தொகையாக—

(i) நட்டஈடு எழுபத்தையாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத இடத்து, ஐயாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததான ஒரு தொகையினையும்;

(ii) நட்டஈடு நூற்றிருபத்தையாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாத இடத்து, ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு அதிகமாகாததான ஒரு தொகையினையும் ;

(iii) நட்டஈடு நூற்றிருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து, பத்தாயிரம் ரூபாவுக்கு அதிகமாகாததான ஒரு தொகையினையும்,

வைப்பிலிடப்பட்ட பணத்திலிருந்து கழித்து அவ்வாறு கழிக்கப்பட்ட பணத்தினை அத்தகைய செலவுகள் எந்த ஆளால் கூறப்பட்டதோ அந்த ஆளுக்கு செலுத்துதல் வேண்டும் ; என்பதுடன்,"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

8. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(i) அதன் (1) ஆம் உட்பிரிவில், "விபத்து இடம்பெற்ற ஓர் ஆண்டுக்குள்ளாக" என்ற சொற்களுக்குப் பதிலாக "விபத்து இடம்பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "4 ஆம் பிரிவின் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில் "ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

10. பின்வரும் புதிய பிரிவானது 23 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"நட்டஈடுகளை உரிய தேதியில் செலுத்தாததிற்கு தொழில் தருநர்கள்மேல் மிகையிறுப்பனவினைச் சுமத்துதல்.

33அ. நட்டவீட்டு செலுத்தப்படுவதற்கான தீர்த்தளிப்பு ஒன்றின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலதான தொகை, தீர்த்தளிப்புத் தேதியிலிருந்து மூப்பது நாட்காலப்பகுதி ஒன்றினுள் செலுத்தப்படாதிருக்குமிடத்து, தொழில்தருநர் அத்தகைய நட்டஈட்டுக்கு மேலதிகமாக, அத்தகைய நட்டஈட்டுத் தொகையின் பத்துச் சத வீதத் தொகைக்குச் சமமான ஒரு தொகையினை மிகையிறுப்பனவு ஒன்றாகச் செலுத்துவதற்கு ஆளானவராதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் "(செலவுத்தொகை என்றவகையாக செலுத்தப்படற்பாலதான பணத் தொகை எதுவும் உட்பட)" என்ற சொற்களுக்குப் பதிலாக, "செலவுத்தொகை அல்லது 23அ என்னும் பிரிவின்கீழ் சுமத்தப்பட்டதான மிகையிறுப்பு என்றவகையாக செலுத்தற்படற்பாலதான பணத் தொகை எதுவும் உட்பட)" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் "மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ்த் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "மேன்முறையீட்டு நீதிமன்றம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "இன்னலுற்ற திறத்தவர் அதனுள் வதிகின்றதான அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) ஆறும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்—

"(7) ஆணையாளர், (4) ஆம் உட்பிரிவின் கீழ் அவரிடம் வைப்பிலிடப்பட்ட தொகையை, 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியில், வட்டி பெறக்கூடிய கணக்கொன்றில் வைப்பிலிடுவித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்து ரூபா பெறுமதியுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூறு ரூபா பெறுமதியுள்ள" என்னும் சொற்களேயும், "மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ்த் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில்" என்னும் சொற்களே இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு, 'மேன்முறையீட்டு நீதிமன்றமானது' என்னும் சொற்களுக்குப் பதிலாக 'அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமானது" என்னும் சொற்களே இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவானது, அதற்கான காப்பு வாசகத்தில் "ஐம்பது ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரத்தைந்நூறு ரூபா" என்னும் சொற்களே இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 53அ, 53ஆ ஆகிய புதிய பிரிவுகளே உட்புகுத்தல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுவதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 53அ, 53ஆ ஆகிய பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

"மேல் நீதிமன்றிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தலும், மேன்முறையீடு மீதான உயர் நீதிமன்றத்தின் தத்துவங்களும்.

53அ. (1) பிரிவு 48 இன் (1) ஆம் உட்பிரிவினல் மேல் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் ஏதேனும் இறுதிக் கட்டளேயினல் இடருறும் எவரேனும் வேலையாள், ஏதேனும் தொழிற் சங்கம் அல்லது தொழில் தருநர் எவரும் அதற்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு, அந்த நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் பெற்று மேன்முறையீடு செய்யலாம்.

(2) உயர்நீதிமன்றமானது, 48 என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அத்தகைய மேல் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டின் மூலமான தனியானதும் புற நீங்கலானதுமான நீதிநெறிக் கவனத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேல் நீதிமன்றத்தின் ஏதேனும் அத்தகைய கட்டளையை உறுதிப்படுத்தலாம், நேர்மாறாக்கலாம், அல்லது வேறுபடுத்தலாம். அத்துடன் விடயத்திற்கேற்றவாறு, தேவைப்படுத்தக் கூடியவாறாக ஆணையாளருக்கு அத்தகைய பணிப்புரைகளை விடுக்கலாம், அல்லது புதிய விளக்கத்திற்குக் கட்டளையிடலாம் அல்லது மேலதிக விசாரணைக்குக் கட்டளையிடலாம், அத்துடன் நீதியின் அக்கறைகள் அவ்வாறு தேவைப்படுமாயின் புதிய அல்லது மேலதிக சான்றைக் கோரலாம், அழைக்கலாம் அத்துடன் அனுமதிக்கலாம். அத்துடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய சான்றானது அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் அல்லது ஆணையாளரினால் பதியப்படுதல் வேண்டும் எனப் பணிக்கலாம்.

மேன்முறையீட்டின் இறுதித் தீர்மானத்தின் மேல் வைப்பிலிடப்பட்ட தொகையை வட்டியுடன் வழங்குதல்.

53ஆ. அரசியலமைப்பின் உறுப்புரை 154ஐ ஆல் தாபிக்கப்பட்ட ஒரு நீதிமன்றமானது, பிரிவு 48 (1) கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஒரு மேன்முறையீடு தொடர்பாக, அல்லது உயர்நீதிமன்றத்தின் ஒரு கட்டளையிலிருந்து அதற்குச் செய்யப்பட்ட ஒரு மேன்முறையீடு தொடர்பாக—

(அ) மேன்முறையீடு, ஆணையாளரின் எக்கட்டளைக்கெதிராகச் செய்யப்பட்டதோ அக்கட்டளையை உறுதிப்படுத்துகின்றவிடத்து, ஆணையாளர், பிரிவு 48 (4) இன் கீழ் வைப்பிலிடப்பட்ட தொகையை அதன் மேல் சேர்ந்த வட்டியுடன், 53 ஆம் காப்பு வாசகத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பணத்தொகையைக் கழித்து, வேலையாளுக்கு கொடுக்கச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) மேன்முறையீடு, ஆணையாளரின் எக்கட்டளைக் கெதிராகச் செய்யப்பட்டதோ அக்கட்டளையை நேர்மாறுக்குமிடத்து, ஆணையாளர் பிரிவு 48 (4) இன் கீழ் வைப்பிலிடப்பட்ட தொகையை அதன் மேல் சேர்ந்த வட்டியுடன் மேன்முறையீட்டாளருக்குத் திரும்பக் கொடுக்கச் செய்வித்தல் வேண்டும்;

(இ) மேன்முறையீடு, ஆணையாளரின் எக்கட்டளைக் கெதிராகச் செய்யப்பட்டதோ அக்கட்டளையை வேறுபடுத்துகின்றவிடத்து, ஆணையாளர் விடயத்தைப் பொறுத்து, மேல் நீதிமன்றத்தினது அல்லது உயர் நீதிமன்றத்தினது கட்டளையைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியதான தொகையை அத்தொகையின் மீதான வட்டியுடன், 53 ஆம் பிரிவின் காப்பு வாசகத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பணத்தொகையைக் கழித்து, பிரிவு 48(4) கீழ் வைப்பிலிடப்பட்ட தொகையிலிருந்து வேலையாளருக்குக் கொடுக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகையினதும் அதன் மீதான வட்டியினதும் மீதி எதாவதிருப்பின் அதனை மேன்முறையீட்டாளருக்குத் திரும்பக் கொடுக்கச் செய்வித்தலும் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவானது, அதன் (3) ஆம் உட்பிரிவின் "ஐம்பது ரூபாவுக்கு மேற்பட்ட ஒரு குற்றப் பணத்திற்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

19. பின்வரும் புதிய பிரிவானது 60 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"உதவுதொகை செலுத்தாத காப்புறுதி அல்லது நட்டவீட்டுத் திட்டத்தில் இருந்து கொடுப்பனவு செய்தல்.

60அ. தொழிலில் இருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம் எவரேனும் வேலையாளுக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஊறுபாட்டுக்காக உதவுதொகை செலுத்தாத ஏதேனும் காப்புறுதித் திட்டத்திலிருந்து அல்லது தொழில்தருநரினால் ஏற்பாடுசெய்யப்படும் ஏதேனும் நட்டஈட்டுத் திட்டத்திலிருந்து ஏதேனும் கொடுப்பனவுக்கு அவர் உரித்துடையவராக இருக்கின்றவிடத்து, அத்தகைய கொடுப்பனவுத் தொகை அவ்வூறுபாடு தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில்தருநரால் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்".

20. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான I ஆம் அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்படுகிறது என்பதுடன், அதற்குப்பதிலாக பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் அட்டவணையினை மாற்றீடு செய்தல்.

## அட்டவணை I

(பிரிவு 2 (1)).

### நிரந்தர பகுதியளவிலான இயலாமையை விளைவிப்பதாகக் கருதப்படும் ஊறுகள் பற்றிய நிரல்

| ஊறுகள் | சம்பாதிக்கும் ஆற்றல் இழப்பின் நூற்று வீதம் |
|---|---|
| நிரந்தரமானதும் குணப்படுத்த முடியாததுமான அவயங்களின் பாரிசம் அல்லது நிரந்தரமாக படுக்கையில் இருப்பதனை விளைவாகக் கொடுப்பதான ஊறுகள். .. | 100 |
| நிரந்தரமாகவே வேலை செய்யமுடியாத நிலையில் முடிந்ததான நிரந்தரமான குணப்படுத்த முடியாததான உளத்திறன் இழப்பு அல்லது நிரந்தரமாகவே வேலை செய்யமுடியாத நிலையினை ஏற்படுத்தும் வேறு ஏதேனும் ஊறு. .. | 100 |
| **கண் ஊறுகள்** | |
| (i) இரண்டு கண்களினதும் கண்பார்வையினை முழுமையாக இழத்தல் .. .. | 100 |
| (ii) ஒரு கண்ணின் கண்பார்வையினை முழுமையாக இழத்தல் .. | 50 |
| **பேச்சுப் புலன் ஊறுகள்** | |
| (i) கேள்விப் புலனை முழுமையாக இழத்தல் .. .. | 60 |
| (ii) ஒரு காதில் கேள்விப்புலனை முழுமையாக இழத்தல் .. | 30 |
| **பேச்சை இழத்தல்** | |
| (i) பேச்சை முழுமையாக இழத்தல் .. .. | 75 |
| **உணர்திறன் இழப்பு** | |
| (i) மணமும் சுவையும் அறியும் புலன்கள் முழுமையாக இழத்தல் .. .. | 50 |
| (ii) மணம் அறியும் புலனை முழுமையாக இழத்தல் .. .. | 25 |
| (iii) சுவை அறியும் புலனை முழுமையாக இழத்தல் .. .. | 25 |
| **முன்னங்கை ஊறுகள்** | |
| (i) முழங்கையோடு அல்லது முழங்கைக்கு மேலேயிருந்து முன்னங்கையினை இழத்தல் .. .. .. | 75 |
| (ii) முழங்கையோடு அல்லது முழங்கைக்கு கீழேயிருந்து முன்னங்கையினை இழத்தல் .. .. .. | 65 |
| **கை ஊறுகள்** | |
| (i) இரண்டு கைகளையும் இழத்தல் .. .. .. | 100 |
| (ii) கையினை இழத்தல் அல்லது பெருவிரலையும் நாலு விரல்களையும் இழத்தல் .. .. .. | 65 |
| (iii) பெருவிரல் (இருமொழிகளும்) .. .. .. | 35 |
| (iv) பெருவிரல் (ஒருமொழி) .. .. .. | 20 |
| (v) நாலு விரல்களை இழத்தல் .. .. .. | 60 |
| **சுட்டு விரல் இழத்தல்** | |
| (i) மூன்று மொழிகள் .. .. .. | 30 |
| (ii) இரண்டு மொழிகள் .. .. .. | 20 |
| (iii) ஒரு மொழி .. .. .. | 10 |

| ஊறுகள் | சம்பாதிக்கும் ஆற்றல் இழப்பின் நூற்று வீதம் |
|---|---|
| நடு, மோதிர, சின்ன விரல்களை இழத்தல் | |
| (i) மூன்று மொழிகள் .. .. .. | 20 |
| (ii) இரண்டு மொழிகள் .. .. .. | 10 |
| (iii) ஒரு மொழி .. .. .. .. | 05 |
| காலை இழத்தல் | |
| (i) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு மேலே .. .. | 75 |
| (ii) முழங்காலில் அல்லது முழங்காலுக்கு கீழே .. | 65 |
| பாதத்தின் ஊறுகள் | |
| (i) இரண்டு பாதங்களையும் இழத்தல் .. .. | 100 |
| (ii) ஒரு பாதத்தினை இழத்தல் .. .. .. | 75 |
| கால் விரல்களை இழத்தல் | |
| (i) கால் பெருவிரல் இரு மொழிகளும் .. .. | 20 |
| (ii) கால் பெருவிரல் ஒரு மொழி .. .. .. | 10 |
| (iii) கால் பெருவிரல் தவிர்ந்த விரல்களில் ஒன்றுக்கு அதிகமானதை இழந்தால், ஒவ்வொன்றும் .. .. | 10 |
| பல்லினமானவை | |
| (i) பாலுறுப்புக்களை முழுமையாக இழத்தல் .. .. | 75 |
| (ii) பாலுறுப்பினை பகுதியளவில் இழத்தல் .. .. | 40 |
| (iii) முகத்தினை மோசமாக வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் | 75 |
| (iv) முகத்தினை வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் தவிர்ந்த வேறு மோசமான உடல்சார்ந்த உருவழித்தல். .. .. | 50 |
| (v) ஒரு பல்லை இழத்தல் .. .. | 05 |
| (vi) மேலே சொல்லப்படாததான (உதாரணம் மூக்கு மார்பு, காது முதலியன) ஏதேனும் உறுப்பின் அதன் பாகத்தின் இழப்பு, மருத்துவ அலுவலர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்படவேண்டிய அதிகபட்சமானது .. .. | 50 |

குறிப்பு

ஏதேனும் ஒரு விபத்தில் மதிப்பீடு செய்யப்படுதலானது 100% அதிகமானதாதலாகாது.

“ முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் அட்டவணையை நீக்குதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான II ஆம் அட்டவணை இத்தால் நீக்கப்படுகின்றது.”

முதன்மைச் சட்டவாக்கத்தின் III ஆம் அட்டவணையினைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான III ஆம் அட்டவணையானது, அதன் ‘ஆ’ என்னும் பகுதியின் முடிவில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

| தொழில்சார் நோய்களின் விவரணங்கள் | செய்முறை பற்றிய விவரணங்கள் |
|---|---|
| மணல்சார் நோய், ஏற்பட்ட இயலாமைக்கு அல்லது மரணத்திற்கு ஒரு முக்கிய காரணியாக இருக்குமாயின், சிலிரேஜீனிக் கனிப்பொருள் தூசி (மணல்சார் நோய், நிலக்கரிசார் மணல் நோய், கன்னர் நோய்) அத்துடன் சிலிகோரியூபகுலோசிஸ் என்பவற்றால் ஏற்பட்ட சளிக்காய்ச்சல். | நிலக்கரிசார் கனிப்பொருள், தூசி என்பதற்கு தொடர்பு படும்படியாக, அல்லது அதனை உபயோகிப்பதில் சம்பந்தப்பட்ட ஏதேனும் செய்முறை |

| தொழில்சார் நோய்களின் விவரணங்கள் | செய்முறை பற்றிய விவரணங்கள் |
|---|---|
| கடின உலோகத் தூசினுல் ஏற்பட்ட மார்புச்சளி நுரையீரல் நோய்கள். | கடின உலோகத் தூசுடன் தொடர்புபடும்படியான சம்பந்தமுடையதான ஏதேனும் செய்முறை. |
| பருத்தித்தூசு (பஞ்சுத் தொழில் சார் நுரையீரல் நோய்) அல்லது மென்சணல், சணல்நார் அல்லது தாழையினநார்தூசு ஆகியவற்றுல் தோற்றுவிக்கப்பட்ட மார்புச்சளி நுரையீரல் நோய். | ஏதேனும் அத்தகைய தூசுடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை |
| இது தொடர்பாக அறியப்பட்டனவும் வேலையின் செய்முறையில் சுயமாகவே உள்ளதுமான உணர்ச்சிப்படுத்தும் மருந்துகள் அல்லது அரிப்பான்கள் என்பவற்றுல் ஏற்பட்ட தொழில்சார் தொய்வு. | அத்தகைய மருந்துகள் அல்லது அரிப்பான்கள் என்பனவற்றை உபயோகிப்பதான அல்லது அவற்றுடன் தொடர்புபடுவதான ஏதேனும் செய்முறை. |
| விதிக்கப்பட்டவாறு சேதனத் தூசுகளை உட்சுவாசிப்பதால் ஏற்பட்ட புற அழற்சிகொண்ட நுரையீரல் கண்ணறை நோயும் அதன் விளைவானவையும். | ஏதேனும் அத்தகைய தூசுடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| பெரிலிய உலோகத்தினுல் அல்லது அதன் நச்சுத் தன்மையுள்ள கூட்டுப் பொருள்களால் ஏற்படும் நோய்கள். | பெரிலியம் உலோகத்தையும் அதன் நச்சுத் தன்மையுள்ள கூட்டுப் பொருளையும் பயன்படுத்துதல் தொடர்பான ஏதேனும் செயற்முறை. |
| கட்மியம் உலோகத்தினுல் அல்லது அதன் நச்சுத்தன்மையுள்ள கூட்டுப் பொருள்கள் என்பனவற்றுல் ஏற்பட்ட நோய்கள். | கட்மியம் உலோகம் அல்லது அதன் நச்சுத் தன்மையுள்ள கூட்டுப்பொருள்கள் பயன்படுத்துதல் தொடர்பான ஏதேனும் செய்முறை. |
| குரோமியத்தினுல் அல்லது அதன் நச்சுத்தன்மையுள்ள கூட்டுப்பொருள்கள் என்பவற்றுல் ஏற்பட்ட நோய்கள். | குரோமியம் அல்லது அதன் நச்சுத் தன்மையான கூட்டுப்பொருள் பயன்படுத்துதல் தொடர்பான ஏதேனும் செய்முறை. |
| மாங்கனிசு அல்லது அதன் நச்சுத் தன்மையுள்ள கூட்டுப்பொருள்கள் என்பவற்றுல் ஏற்பட்ட நோய்கள். | மாங்கனிசு அல்லது அதன் நச்சுத்தன்மையுள்ள கூட்டுப்பொருள்கள் என்பவற்றினைப் பயன்படுத்தல் தொடர்பான ஏதேனும் செய்முறை. |
| புளோரீன் அல்லது அதன் நச்சுத் தன்மையுள்ள கூட்டுப்பொருள் என்பவற்றுல் ஏற்பட்ட நோய்கள். | புளோரீன் அல்லது அதன் நச்சுத் தன்மையுள்ள கூட்டுப் பொருள்கள் என்பவற்றினைப் பயன்படுத்தல் தொடர்பான ஏதேனும் செய்முறை. |
| காபனிருசல்பைட்டினுல் ஏற்பட்ட நோய்கள். | காபனிரு சல்பைட்டின் பயன்பாடு தொடர்பான ஏதேனும் செய்முறை. |

| தொழில்சார் நோய்களின் விவரணங்கள் | செய்முறை பற்றிய விவரணம் |
|---|---|
| கொழுப்பார்ந்த அல்லது நறுமணம் சார்ந்த ஐதரோ காபன்களின் நச்சுத் தன்மையுள்ள அலோஜன் நஞ்சு விளை பொருட்கள் என்பவற்றால் ஏற்பட்ட நோய்கள். | அதனுடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| நைதரோகிளிசரின் அல்லது வேறு நைதரிக் அமில எசுத்தர்கள் என்பவற்றால் ஏற்பட்ட நோய்கள். | நைதரோ கிளிசரின் பயன்பாடு தொடர்பான ஏதேனும் செய்முறை. |
| அல்ககோல்கள் அல்லது கீற்ரோன்கள் என்பவற்றால் ஏற்பட்ட நோய்கள். | அல்ககோல்கள் கிளைக்கோல்கள் அல்லது கீற்ரோன்கள் என்பவற்றின் பயன்பாடு தொடர்பான ஏதேனும் செய்முறை. |
| மூச்சுத்திணறவைப்பான்கள், காபனோரொக்சைட்டு, ஐதரசன் சயனைட்டு, அல்லது அதன் நச்சுத்தன்மையுள்ள விளைபொருள்கள், ஐதரசன் சல்பைட்டு என்பனவற்றால் ஏற்பட்ட நோய்கள். | மூச்சுத்திணறவைப்பான்கள், காபனோரொக்சைட்டு, ஐதரசன் சயனைட்டு அல்லது அதன் நச்சுத் தன்மையுள்ள விளைப் பொருள்கள் என்பவற்றுடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை |
| சத்தங்களால் ஏற்பட்ட கேள்விப்புலன் தொடர்பான பழுது | சத்தத்துடன் தொடர்ப்படும்படியான ஏதேனும் செய்முறை. |
| அதிர்வினால் ஏற்பட்டதான நோய்கள்: (தசைநார்கள், இழைநார்கள், எலும்புகள், மூட்டுகள், மேற்பரப்பிலுள்ள இரத்தக் குழாய்கள் அல்லது மேற்பரப்பிலுள்ள நரம்புகள் என்பவற்றில் ஒழுங்கின்மை.) | அதிர்வுகளுடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| அமுக்கப்பட்ட காற்றில் வேலை செய்வதினால் ஏற்பட்டதான நோய்கள். | சம்பந்தப்பட்ட ஆபத்துடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| அயனக்கும் கதிர்வீச்சுக்களினால் ஏற்பட்டதான நோய்கள். | அயனக்கும் கதிர்வீச்சு செயற்பாடுகளுடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| வேறு இனங்களின் கீழ் சேர்க்கப்படாததான பௌதிக, இரசாயன, அல்லது உயிரியில் காரணிகளால் ஏற்பட்ட தோல் நோய்கள். | சம்பந்தப்பட்ட ஆபத்துடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| தார், நீலக்கீல், பழுப்புநிலக்கரி, கனிய எண்ணெய், சாயப்பொருள், கூட்டுப்பொருள்கள், அல்லது பதார்த்தங்களின் உற்பத்திப் பொருள்கள் கூட்டுப்பொருட்கள் அல்லது மண்டிகள் என்பவற்றால் ஏற்பட்டதான முதனிலை மேற்றோல்சார் புற்றுநோய். | சம்பந்தப்பட்ட ஆபத்துடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |
| கன்னரில் ஏற்பட்டதான நுரையீரல் புற்றுநோய் அல்லது இடைப்படைசார் நோய். | சம்பந்தப்பட்ட ஆபத்துடன் தொடர்புபடும்படியான ஏதேனும் செய்முறை. |

| தொழில்சார் நோய்களின் விவரணங்கள் | செய்முறை பற்றிய விவரணங்கள் |
|---|---|
| தூய்மைகெடுக்கும் குறிப்பான ஆபத்து இருக்கும் தொழிலில்தொற்றிக் கொண்ட தொற்றுநோய் அல்லது கிருமி நோய் | (அ) சுகாதார அல்லது ஆய்வுகூட வேலை.<br>(ஆ) விலங்கு மருத்துவ வேலை.<br>(இ) விலங்குகளை, விலங்கின் இறந்த உடலை அல்லது அத்தகைய இறந்த விலங்கின் உடலின் பகுதிகளை அல்லது விலங்குகளால், விலங்கின் இறந்த உடலால், அல்லது அத்தகைய விலங்கின் இறந்த உடலின் பாகத்தினுல் தொற்றிக் கொள்ளப்படக் கூடியதான வியாபாரப் பொருட்களைக் கையாளுகின்றதான வேலை.<br>(ஈ) தொற்றிக்கொள்ளும் ஆபத்தைக் குறிப்பாகக் கொண்டுள்ள ஏதேனும் வேறு வேலை |
| காபனிரு சல்பைட்டுகளினுல் ஏற்பட்டதான நோய். | காபனிருசல்பைட்டின், காபனிரு சல்பைட்டின் கூட்டினுல் அல்லது காபனிரு சல்பைட்டினைக் கொண்டுள்ள தூபங்களுடன் தொடர்புபடும்படியான நிலை உள்ள அல்லது அவற்றினை உபயோகிக்கின்ற ஏதேனும் செயற்பாட்டு முறை. |
| சேதன பொசுபேற்றினுல் ஏற்பட்ட நோய்கள். | பீடை அல்லது பயிர்புழு அழிப்பதற்கான சேதனப் பொசுபேற்றினை கையாளுதல். |
| கரியமில வாயுவினுல் ஏற்பட்ட நோய்கள். | வடிசாலைகளில் நொதிக்க வைத்தல் அத்துடன் சுண்ணும்புச் சூளைகளில் சுண்ணும்பினை உருவாக்குதல் சம்பந்தப்பட்ட ஏதேனும் முறையினதான வெடித்தல், கனிப்பொருள் நீர்களைத் தயாரித்தல். |
| செந்நிறக்கீழ்க் கதிர்வீச்சுக்கொண்ட உருக்கப்பட்ட கண்ணுடி அல்லது செஞ்சூட்டு உலோகத்தின் பேரொளிர்வுடன் தொடர்புபட்டதால் ஏற்பட்ட தொழில்சார் கண்படல் நோய். | உருக்கப்பட்ட கண்ணுடி அல்லது செந்நிறக் கீழ்க் கதிர்வீச்சுக் கொண்ட செஞ்சூட்டு உலோகத்தின் பேரொளிர்வு அடிக்கடி அல்லது நீண்டநேரம் தொடர்புபட்டிருத்தல் சம்பந்தப்பட்ட ஏதேனும் செய்முறை |
| காபனிரு சல்பைட்டினுல் ஏற்பட்ட நோய்கள் | (அ) காபனிரு சல்பைட்டினது தயாரிப்பு.<br>(ஆ) மரக்கூழ் செயற்பாட்டு முறையினுல் செயற்கைப்பட்டு தயாரித்தல்.<br>(இ) இறப்பர் கைத்தொழில்; அல்லது<br>(ஈ) காபனிரு சல்பைட்டு கொண்டுள்ள தயாரிப்புகளை அல்லது அவற்றின் உபயோகம் சம்பந்தப்பட்ட தயாரிப்புகளை அல்லது காபனிரு சல்பைட்டிலிருந்து தோன்றுவனவற்றுடன் தொடர்புபடும்படியான வேறு ஏதேனும் கைத்தொழில். |
| மணல்சார் நோய் .. .. | சிலிக்காவினைக் கொண்டுள்ள தூசியினை சுவாசித்தல் சம்பந்தமான ஏதேனும் செய்முறை. |
| கன்னர் நோய். .. .. | (i) இழைநார்சீமெந்துப் பொருள்கள் அல்லது கன்னர் அரிவுப் பலகை, தயாரிப்பு<br>(ii) கன்னர் கொண்டுள்ள தாதுப் பொருட்களைப் பதனிடுதல்". |

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான IV ஆம் அட்டவணையின மாற்றீடு செய்தல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான IV ஆம் அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகிறது :—

## அட்டவணை IV

குறித்த சில விடயங்களில் கொடுபடற்பாலதான நட்டஈடு
நட்டஈட்டுத் தொகை

(பிரிவு 6)

| ஊறுபாடுற்ற வேலையாளரின் மாதாந்தச் சம்பளங்கள் | வேலையாளரின் இறப்பு | வேலையாளரின் நிரந்தர பூரண இயலாமை | வேலையாளரின் தற்காலிக இயலாமைக்கு அரை மாதாந்த நட்டஈடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 0 — 250 .. | 19,404 .. | 21,163 | ஆகக்கூடிய தொகை |
| 251 — 500 .. | 40,504 .. | 44,186 .. | யான ரூபா 684 ரூபா |
| | | .. | வரை அவரது அரைவாசி |
| 501 — 750 .. | 60,819 .. | 66,348 .. | மாதாந்தச் |
| 751 — 1000 .. | 77,576 .. | 84,629 .. | சம்பளம் |
| 1001 — 1250 .. | 89,021 .. | 97,114 .. | |
| 1251 — 1500 .. | 101,693 .. | 110,938 .. | 684.00 |
| 1501 — 1750 .. | 111,091 .. | 121,190 .. | 684.00 |
| 1751 — 2000 .. | 122,918 .. | 134,093 .. | 757.50 |
| 2001 — 2200 .. | 131,789 .. | 143,769 .. | 832.00 |
| 2201 — 2400 .. | 138,402 .. | 150,984 .. | 895.00 |
| 2401 — 2600 .. | 146,618 .. | 159,946 .. | 960.00 |
| 2601 — 2800 .. | 156,007 .. | 170,189 .. | 1,003.00 |
| 2801 — 3000 .. | 159,396 .. | 173,887 .. | 1,030.00 |
| 3001 — 3200 .. | 165,858 .. | 180,936 .. | 1,113.00 |
| 3201 — 3400 .. | 175,190 .. | 191,117 .. | 1,175.00 |
| 3401 — 3600 .. | 184,246 .. | 200,995 .. | 1,236.00 |
| 3601 — 3800 .. | 195,241 .. | 212,990 .. | 1,310.00 |
| 3801 — 4000 .. | 205,438 .. | 224,179 .. | 1,379.00 |
| 4001 — 4400 .. | 209,498 .. | 228,179 .. | 1,409.00 |
| 4401 — 4800 .. | 217,498 .. | 236,179 .. | 1,469.00 |
| 4801 — 5200 .. | 225,498 .. | 244,179 .. | 1,529.00 |
| 5201 — 5600 .. | 233,498 .. | 250,000 .. | 1,589.00 |
| 5601 — 6000 .. | 241,498 .. | 250,000 .. | 1,649.00 |
| 6001 — 6400 .. | 249,498 .. | 250,000 .. | 1,709.00 |
| 6401 — 6800 .. | 250,000 .. | 250,000 .. | 1,769.00 |
| 6801 — 7200 .. | 250,000 .. | 250,000 .. | 1,829.00 |
| 7201 — 7600 .. | 250,000 .. | 250,000 .. | 1,889.00 |
| 7601 — 8000 .. | 250,000 .. | 250,000 .. | 1,949.00 |
| 8001 — 8400 .. | 250,000 .. | 250,000 .. | 2,009.00 |
| 8401 — 8800 .. | 250,000 .. | 250,000 .. | 2,069.00 |
| 8801 — 9200 .. | 250,000 .. | 250,000 .. | 2,129.00 |
| 9201 — 9600 .. | 250,000 .. | 250,000 .. | 2,189.00 |
| 9601 — 10,000 .. | 250,000 .. | 250,000 .. | 2,249.00 |
| 10001 — 10,200 .. | 250,000 .. | 250.000 .. | 2,309.00 |
| 10201 — 10,400 .. | 250,000 .. | 250,000 .. | 2,369.00 |
| 10401 — 11,000 .. | 250,000 .. | 250,000 .. | 2,429.00 |
| 11001 — 11,400 .. | 250,000 .. | 250,000 .. | 2,489.00 |
| 11401—ரூபாவும் அதற்குமேற்படவும் | 250,000 .. | 250,000 .. | 2,500.00" |

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.